# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.3/2017 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| Name | : | முனியாண்டி |
| Father's/Husband Name: | | வெங்கடாசலம் |
| Village | : | உடும்பியம் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 54/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.06.2022

**முதல் விசாரணை**

நான் உடும்பியத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது காட்டு வழியாக போய் வருவதன் மூலம் எனக்கு தெரியும். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு மதியம் 12, 1 மணி அளவில் பொதுவாக எதிரி எனது காட்டு வழியாக வருவார் போவார் நான் வராதீர்கள் என்று சொல்லி பார்த்தேன். நான் ஏன் காட்டில் தடம் போட்டு வருகிறீர்கள் என்று இரண்டு பேரிடமும் கேட்டதற்கு காடு தேய்ந்து போகுதா என்று கேட்டார்கள். பெரம்பலூர் புது பஸ் ஸ்டாண்ட் அருகில் கலைசெல்வியை ஆஜர் எதிரி கண்ணத்தில் அடித்து விட்டார். நான் ஏன் சண்டை போட்டு கொள்கிறீர்கள் என்று கேட்டதற்கு என்னையும் அடித்து விட்டார். நான் அவர் அடித்ததை காவல் நிலையத்தில் சொல்லி அங்கு வழக்கு பதிவாகி உள்ளது. அதன் பிறகு அரசு மருத்துவமனையில் கலைசெல்வியை சேர்த்து விட்டு நான் வீட்டுக்கு போய் விட்டேன். போலிசார் என்னை ஒரு வாரம் கழித்து விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் உடும்பியம் ஆகும். ஆஜர் எதிரி பகடப்பாடி. ஆஜர் எதிரியின் ஊருக்கும் எனது ஊருக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 6 மைல் தூரம் இருக்கும். ஆஜர் எதிரிக்கு எனது ஊரில் காடு இருக்கிறதா என்றால் இல்லை. கலைசெல்வி எனது உறவினரா என்றால் இல்லை. என்னை அடித்ததற்கு நான் தனியாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அதன் பிறகு வழக்கறிஞரை அழைத்து சென்று புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் கலைசெல்வி எல்லோரும் ஒன்றாக சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான்.

கலைசெல்விக்கும் ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவர்கள் இருவருக்கிடையில் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது. பெரம்பலூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் பிரச்சனை நடந்ததாக சொல்வது எத்தனை மணி இருக்கும் என்றால் 12,1 மணி இருக்கும். அப்போது அங்கே கூட்டம் நிறைய இருந்ததா என்றால் ஆட்கள் நிறையவே இருந்தார்கள். நான் அன்று பெரம்பலூருக்கு வந்து இருந்தேனா என்றால் ஆம். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எனக்கும் எதிரிக்கும் இடையே முன் சொன்ன காட்டு பிரச்சனை வைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.3/2017 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.3 |
| Name : | | பழனிமுத்து |
| Father's/Husband Name: | | காத்தான் |
| Village : | | வீரகனூர் |
| Taluk : | | கெங்கவல்லி |
| Age : | | 54 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.06.2022

**முதல் விசாரணை**

நான் வீரகனூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனக்கு தேதி ஞாபகமில்லை. 2012–ம் வருடம் மதியம் 12.45 லிருந்து 1.00 மணிக்குள் நீதிமன்றத்தில் நாங்கள் சாட்சி சொல்லி விட்டு பேருந்து நிலையத்திற்கு போகும் போது முன்பு முனியாண்டியும், செல்வியும் போய் கொண்டு இருந்தார்கள். நான் பின்னால் தான் போனேன். ஆஜர் எதிரி செல்வியையும், முனியாண்டியையும் அடித்து அவர்கள் சத்தம் போட்டார்கள். நான் அதை பார்த்து சத்தம் போட்டு செல்வியை அவர்கள் மருத்துவமனையில் சேர்த்து விட்டார்கள். நான் ஊருக்கு கிளம்பி வந்து விட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

செல்வி எனக்கு உறவினரா என்றால் இல்லை. எனக்கு நேரடியாக எதிரிக்கும் கலைசெல்விக்கும் என்ன பிரச்சனை என்பது தெரியாது என்றால் சரிதான். நான் பேருந்து நிலையத்தோடு கிளம்பி போய் விட்டேன் என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.